**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, L.L.M.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26–ஆம் நாள் வியாழக்கிழமை**

**முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.48/2025**

...

ஒத்தக்கடை காவல் நிலையம்
குற்ற எண்.186/2025
பிரிவுகள் 103, 3(5) BNS .... குற்றமுறையீட்டாளர்

**//எதிரிடை//**

1) சிவக்குமார் (எ) செட்டியார்,
த/பெ.மலைச்சாமி,
2/42, காந்திநகர்,
ஒத்தக்கடை, மதுரை மாவட்டம்

2) சித்திரைசெல்வம்,
த/பெ.குணசேகரன்,
408, காந்திநகர்,
ஒத்தக்கடை,
தற்போதைய முகவரி
ராஜீவ் நகர் 2–வது தெரு, ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம்

3) விக்னேஷ்,
த/பெ.நாகராஜ்,
1/7, வெள்ளியங்குன்றம்,
அப்பன்திருப்பதி,
மதுரை மாவட்டம்.
தற்போதைய முகவரி
லெட்சுமி விலாஸ் பேங்க் அருகில்,
பாண்டியன் நகர், ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம். **....எதிரிகள்**

THENDRAAL
MUTHU
DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 07:04:13 +0530

இவ்வழக்கானது மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.11.2025–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, PRC No.48/2025 என்ற எண் வழங்கப்பட்டு, அரசு சார்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.நிர்மல்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அழகுராஜா அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் ஆவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

1) இவ்வழக்கின் வாதி மகாலிங்கம் என்பவர் மதுரை மாவட்டம், கிழக்கு வட்டம், ராஜகம்பீரம், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார். கடந்த 10.06.2025–ம் தேதி 14.15 மணியளவில் எதிரிகள் மூன்று பேரும் 2–வது எதிரிக்கு சொந்தமான TN 59 CD 4704 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோவில் மாட்டுத்தாவணியில் உள்ள ஒயின்ஸ் ஷாப்பிற்கு சென்று கொண்டிருந்தபோது வழியில் மீனாட்சி மிஷன் மருத்துவமனை முன்பு எதிரிகளின் ஆட்டோவை ஏறிச் சென்றபோது எதிரிகள் மூன்று பேரும் சரக்கடிக்க போவதாக பேசிக்கொண்டிருப்பதை கவனித்த மேற்படி நபரும் தன்னிடம் ரூ.250/– இருப்பதாகவும், தானும் சரக்கடிக்க வருவதாகவும் எதிரிகளிடம் கூறியதால் எதிரிகள் மூன்று பேரும் அவரையும் சேர்த்துக்கொண்டு மாட்டுத்தாவணியில் உள்ள ஒயின்ஸ் ஷாப்பில் சரக்கு வாங்கிக்கொண்டு எங்க ஒத்தக்கடை ஏரியாவுக்கு சென்று ஜாலியாக சரக்கடிக்கலாம் என்று மேற்படி நபரையும் அழைத்துக்கொண்டு ஒத்தக்கடை அம்மன் ஹோட்டல் எதிரே உள்ள ரோட்டில் உள்ளே சென்று மயானம் அருகே உள்ள காலியிடத்தில் உள்ள ஒரு மரத்தடியில் அமர்ந்து எதிரிகள் மற்றும் கொலையுண்டு இறந்த நபரும் மது அருந்தியுள்ளார்கள். அப்போது மதுபோதையில் கொலையுண்டு இறந்த நபர் எதிரிகளை அசிங்கமாக பேசியதால் எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து மேற்படி

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 07:04:19 +0530

கொலையுண்டு இறந்த நபரை கையால் தாக்கியுள்ளனர். அடி தாங்காமல் மேற்படி நபர் அங்கிருந்து தப்பியோடியவரை மேற்படி எதிரிகள் மூன்று பேரும் மடக்கி பிடித்து ஆட்டோவில் ஏற்றி காந்தி நகர் சுடுகாடு செல்லும் வழியில் RV ஹோட்டல் அருகே ஆட்டோவில் வைத்து அடித்துள்ளார்கள். சத்தம் கேட்டு அருகில் இருந்த கடைக்காரர்கள் மற்றும் அருகில் இருந்தவர்கள் பார்க்கவும் மீண்டும் ஆட்டோவை எடுத்து காந்தி நகர் பொது மயானத்திற்கு சென்றதும் அடி தாங்க முடியாமல் தப்பியோடியவரை எதிரிகள் மூன்று பேரும் கொலை செய்ய வேண்டும் என்ற ஒருமித்த கருத்துடன் விரட்டிச் சென்று வாட்டர் டேங்க் கீழே வைத்து எதிரி விக்னேஷ் என்பவர் அங்கு கிடந்த ஒரு கல்லை எடுத்தும், எதிரி சித்திரைச்செல்வம் என்பவர் அங்கு கிடந்த ஒரு சிலாப் கல்லை எடுத்தும், எதிரி சிவக்குமார் (எ) செட்டியார் என்பவர் அங்கு கிடந்த ஒரு கல்லை எடுத்தும் தலையிலும், முகத்திலும் மாறி மாறி தாக்கி கொலை செய்த குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 முதல் 3 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 103 r/w 3(5) BNS–ன்படி தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளார்கள்.

2) இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS–ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின் போது அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டா? என வினவியபோது, 1 முதல் 3 எதிரிகள் "உண்டு" என்று கூறினார்கள்.

4) வழக்கு விசாரணையின் போது பிணையில் உள்ள மேற்படி 1 முதல் 3 எதிரிகள் வழக்கு விசாரணை முடியும் வரை அதே பிணையில் இருக்கவும், பிரிவு 323/362 BNSS–ன் கீழ் மதுரை, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 07:04:24 +0530

5) இவ்வழக்கில் பிணையில் உள்ள 1 முதல் 3 எதிரிகள் வரும் 20.04.2026–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என பிரிவு 323/362 BNSS–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள், இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 07:04:30 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>நகல்:</u>

1) மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) அரசு குற்றத்துறை வழக்கறிஞர், மதுரை.